Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 269 | உள்ளூர் - 27.09.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 269 | வெளியூர் - 28.09.2026 | திங்கட்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


**2027 வரை இவர்களுக்கு சனியால் ஜாக்பாட்!**

**தெற்கு ரயில்வேயில் 62 காலியிடங்கள்!**

**8-வது சம்பள கமிஷன்: சம்பள உயர்வு?**

**கரூர் துயரத்தின் ஓராண்டு: "ஆறாத ரணம், தீராத வலி" - முதல்வர்!**

## மாதா அமிர்தானந்தமயி பிறந்தநாள் விழா தொடக்கம்: சி.பி.ராதாகிருஷ்ணன், அமித்ஷா பங்கேற்பு!



கொல்லம், செப். 27–

கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் அம்ரிதபுரியில் அம்ரிதா விஷ்வ வித்யாபீட வளாகம் அமைந்துள்ளது. இதன் நிறுவனர் மாதா அமிர்தானந்த மயியின் 73–வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம் தொடங்கியது.

இன்று (27.09.2026)காலை அம்ரிதபுரி வந்த, டியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் 11 மணிக்கு கொண்டாட்ட நிகழ்ச்சிகளை தொடக்கி வைத்தார் . இதனிடையே செப்டம்பர் 26இல் மாலை அம்ரிதபுரி வந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மாதா அமிர்தானந்தமயியை சந்தித்து வாழ்த்து பெற்றார். இதைத் தொடர்ந்து அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளை அமித் ஷா தொடங்கி வைத்தார். இன்று( 27 09 .2026) காலை நடைபெறவுள்ள கொண்டாட்ட நிகழ்ச்சியில் கேரள ஆளுநர் ஆர்.வி. அர்லேகர், முதல்வர் வி.டி. சதீஷன், மத்திய அமைச்சர்கள் கே.ராம்மோகன் நாயுடு, மத்திய இணை அமைச்சர் சுரேஷ் கோபி, கேரள அமைச்சர்கள் ரமேஷ் சென்னிதலா, கே.முரளிதரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியின்போது கோவா முன்னாள் ஆளுநரும், முன்னாள் அட்டர்னி ஜெனரலுமான பி.எஸ்.தரன் பிள்ளைக்கு அம்ரித கீர்த்தி விருது வழங்கப்பட்டது. அசாம் வெள்ள நிவாரண நிதிக்காக ரூ.2 கோடி நிதி, அமிர்தானந்தமயி மடம் சார்பில் வழங்கப்பட்டது.

## ஆண்டுக்கு ரூ.23.9 லட்சம் சேமிப்பு! இந்தியாவின் முதல் எல்.என்.ஜி. ரயில் தொடக்கம்!



புதுடெல்லி, செப். 27–

இந்தியாவின் முதல் எல்.என்.ஜி.டீசல் இரட்டை எரிபொருள் ரயிலை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இன்று (செப். 27) சபர்மதி ரயில் நிலையத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்

டீசல் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கில், தலா 1,400 குதிரைத்திறன் கொண்ட இரண்டு உந்துசக்திப் பெட்டிகள் புதிய எரிபொருள் அமைப்புக்கு மாற்றப்பட்டுள்ளன. இவை 2,000 கிலோமீட்டருக்கும் அதிகமான சோதனை ஓட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளன.இந்தத் தொழில்நுட்பத்தில் டீசல் பயன்பாட்டில் சுமார் 40 சதவீதத்தைத் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவால் மாற்ற முடியும். எல்.என்.ஜி. கிடைக்காதபோதும் டீசலில் ரயிலைத் தொடர்ந்து இயக்கலாம். சோதனைத் தரவுகளின்படி, எட்டு பெட்டிகள் கொண்ட ஒரு ரயிலுக்கு ஆண்டுக்கு சுமார் ரூ.23.9 லட்சம் வரை எரிபொருள் செலவு மிச்சமாகும் என ரயில்வே மதிப்பிட்டுள்ளது.

## கரூர் துயரத்தின் ஓராண்டு: "ஆறாத ரணம், தீராத வலி" — முதல்வர்!




சென்னை, செப். 27–

கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்தின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டி, முதல்வர் சி. ஜோசப் விஜய் உருக்கமாக அஞ்சலி செலுத்தியுள்ளார்.

கடந்த 2025 செப்டம்பர் 27–ஆம் தேதி கரூரில் விஜய் பிரசாரம் மேற்கொண்டபோது ஏற்பட்ட கடும் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதனை நினைவுகூர்ந்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள விஜய், தனது வாழ்விலும் கரூர் மக்களின் வாழ்விலும் தமிழக மக்களின் மனதிலும் "ஆறாத ரணமாக, தீராத வலியாக" அந்த நாள் நீடிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உறவுகளை இழந்து தவிப்போருக்கு ஆறுதலாகவும் ஆதரவாகவும் இருப்போம் எனத் தெரிவித்த அவர், உயிரிழந்த அனைவருக்கும் இதய அஞ்சலி செலுத்தியுள்ளார்.

## மீனாட்சி அம்மன் கோவிலில் தடையற்ற லட்டு விநியோகத்துக்கு ஏற்பாடு எங்கே? பக்தர்கள் கேள்வி!



மதுரை, செப். 27–

உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் பக்தர்களுக்கு வழங்கப்படும் இலவச லட்டு பிரசாத விநியோகம் செப்டம்பர் 27 இல் காலை தடைபட்டதாக பக்தர்கள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து விசாரித்தபோது, இயந்திரக் கோளாறே காரணம் எனக் கூறப்பட்டதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆனால், பிரசாத ஸ்டால்களில் லட்டுகள் விற்பனை செய்யப்படுவதாகக் கூறும் பக்தர்கள், இலவச விநியோகத்தைத் தொடரவும் மாற்று ஏற்பாடு செய்ய முடியாதா எனக் கேள்வி எழுப்புகின்றனர். மேலும், அபிஷேக நேரங்களிலும் இலவச லட்டு விநியோகம் நிறுத்தப்படுவதாகவும், பணியாளர்கள் பற்றாக்குறையால் சில நேரங்களில் சேவார்த்திகள் மூலம் பிரசாதம் வழங்கப்படுவதாகவும் பக்தர்கள் கூறுகின்றனர். இதனால், பிரசாத விநியோகத்திற்குப் போதுமான நிரந்தரப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ள நிலையில், கோவிலுக்கு அதிகளவில் பக்தர்கள் வருவார்கள் என்பதை முன்கூட்டியே கணித்து, தேவையான ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டும் என பக்தர்களும் சமூக ஆர்வலர்களும் வலியுறுத்துகின்றனர்.

"இலவசப் பிரசாதம் வழங்கப்படும் என்று அறிவித்த பிறகு, தடையின்றி விநியோகிக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இயந்திரக் கோளாறு ஏற்பட்டால் பயன்படுத்த மாற்று இயந்திரம் அல்லது தேவையான உதிரிப் பாகங்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டாமா?" என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இயந்திரக் கோளாறை விரைந்து சரிசெய்வதுடன், போதுமான பணியாளர்களை நியமித்து, அபிஷேக நேரங்களிலும் பிரசாத விநியோகம் தடைபடாத வகையில் மாற்றுப் பணி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதே பக்தர்களின் கோரிக்கையாக உள்ளது. முன்னேற்பாடுகள் போதுமானதாக இருந்தனவா என்பதை ஆய்வு செய்து, அலட்சியம் கண்ட றியப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். "உரியவர்கள் மீது நடவடிக்கை பாயுமா? நிர்வாகம் வழக்கமான பிரச்சினையாகக் கடந்து செல்லுமா? சொக்கனுக்கே வெளிச்சம்!" என பக்தர்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர். இலவச விநியோகத் தடை, ஸ்டால் விற்பனை, பணியாளர் பற்றாக்குறை மற்றும் மாற்று ஏற்பாடுகள் குறித்த கோவில் நிர்வாகத்தின் அதிகாரப்பூர்வ விளக்கம் வழங்கப்பட்ட தகவல்களில் இடம்பெறவில்லை.

## இந்தியாவுடன் மோதினால் தக்க பதிலடி!

# பயங்கரவாதிகளுக்கு மோடி எச்சரிக்கை! 'மன் கி பாத்' உரையில் உறுதி!

### மணப்பாறை செல்வராஜுவுக்குப் பாராட்டு!!



புதுடில்லி, செப். 27–

இந்தியாவுடன் மோதத் துணியும் பயங்கரவாதிகளுக்குத் தகுந்த பதிலடி நிச்சயம் அளிக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். 'மன் கி பாத்' நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

**சர்ஜிக்கல் ஸ்ட்ரைக்: 10 ஆண்டுகள் நிறைவு;**

பாலக்கோட் தாக்குதல் முதல் ஆபரேஷன் சிந்தூர் வரை நாம் தெரிவிக்கும் முக்கியச் செய்தி ஒன்றுதான்: இந்தியாவுடன் மோதத் துணியும் பயங்கரவாதிகளுக்குத் தகுந்த பதிலடி நிச்சயம் அளிக்கப்படும். பயங்கரவாதத்தை உறுதியான பதிலடி நடவடிக்கைகள் மூலம் எதிர்கொள்வோம் என்பதை இந்தியா தெளிவுபடுத்தியுள்ளது. இந்தியாவின் முக்கிய வரலாற்றுச் சாதனையான 'சர்ஜிக்கல் ஸ்ட்ரைக்' நிகழ்ந்து 10 ஆண்டுகள் நிறைவடை யவுள்ளன. நமது துணிச்சலான வீரர்கள் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைக் கடந்து சென்று, பாகிஸ்தானில் பயங்கரவாதிகளின் மறைவிடங்களைத் தாக்கிய விதம் உலகையே வியப்பில் ஆழ்த்தியது. இந்தியாவின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக் கொள்கைக்கு இந்தத் தாக்குதல் புதிய முன்னுதார ணமாக அமைந்தது.

**9/11 தாக்குதல்: உயிரிழந்தோருக்கு அஞ்சலி:**

இந்த ஆண்டு 9/11 பயங்கரவாதத் தாக்குதல் நிகழ்ந்து 25 ஆண்டுகள் நிறைவடைகின்றன. அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தில் உயிரிழந்த அப்பாவிகளில், அமெரிக்கர்களுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் இந்தியர்களே இருந்தனர்.

2014ஆம் ஆண்டு பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு, நியூயார்க்கில் அந்த அப்பாவிக் குடிமக்களுக்கு அஞ்சலி செலுத்தச் சென்றது நினைவிருக்கிறது. இன்றும் கோடிக்கணக்கான இந்தியர்களின் சார்பாக, துயருற்றிருக்கும் அந்தக் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மக்கள்தொகைக் கணக்கெடுப்பு தேசியப் பொறுப்பு:**

மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஒரு தேசியப் பொறுப்பாகும். இதில் ஒவ்வொரு குடிமகனுக்கும் பங்கு உள்ளது.

இந்திய இளைஞர்கள் போதைப்பொருளுக்கு எதிராக ஒன்றிணைந்து வருகின்றனர். போதைப்பொருள் ஒழிப்பு இளைஞர் இயக்கத்தின் மூலம் பிரசாரங்களையும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

**சோமநாதர் ஆலயமும் மொதேரா சூரியக் கோவிலும்:**

இந்த ஆண்டை சோமநாதர் சுயமரியாதை விழாவுடன் தொடங்கினோம். கி.பி.1026இல் கஜினி முகமது முதன்முறையாக சோமநாதர் ஆலயத்தை அழித்தான். அந்த ஆலயத்தை அழிப்பதன் மூலம் பாரதத்தின் அடையாளத்தையே துடைத்தெறிய வந்தவர்களின் இருப்பு இன்று இல்லாமல் போய்விட்டது.

ஆனால், சோமநாதர் ஆலயம் தனது முழுப் பெருமையுடன் பரந்த கடலோரத்தில் கம்பீரமாக நின்று, இந்தியாவின் அழியாத தன்மையை உணர்த்திக்கொண்டிருக்கிறது.

கி.பி.1026இல் சோமநாதர் ஆலயம் அழிக்கப்பட்ட அதே ஆண்டில், குஜராத்தில் உள்ள புகழ்பெற்ற மொதேரா சூரியக் கோவிலும் இடிக்கப்பட்டது. மொதேரா கோவில் அழிக்கப்பட்டதன் 1,000 ஆண்டுகள் தற்போது நிறைவடைகின்றன.

சோமநாதர் போன்ற முக்கிய வழிபாட்டுத் தலம் அவமதிக்கப்பட்டதும், பல இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்பட்டதும் எந்தவொரு சமூகத்தின் அல்லது நிர்வாகத்தின் மன உறுதியையும் குலைத்திருக்கக்கூடும். இருப்பினும், முதலாம் பீமதேவன் கஜினி முகமதுவை எதிர்த்து நின்றதுடன், குறுகிய காலத்திலேயே மொதேரா சூரியக் கோவிலை மீண்டும் கட்டியெழுப்பினார்.

**மணப்பாறை செல்வராஜுவின் முயற்சிக்குப் பாராட்டு:**

கடந்த காலத்துடனான நமது தொடர்பு இன்றும் உயிர்ப்புடன் உள்ளது. அந்தப் பிணைப்பை வலுப்படுத்த அர்ப்பணிப்புடனும் கடின உழைப்புடனும் செயல்படுபவர்களே இதற்கு முக்கியக் காரணம்.

அத்தகைய தனித்துவமான முயற்சி, தமிழகத்தின் திருச்சி மாவட்டம் மணப்பாறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அங்குள்ள கல்லூரி ஒன்றின் தமிழ்த் துறையைச் சேர்ந்த செல்வராஜு இந்த முயற்சியை முன்னெடுத்து வருகிறார். வகுப்பறைப் பாடத்தின்போது, மாணவர் ஒருவர் மூலம் பழங்காலச் சிற்பங்கள் குறித்த தகவலை அவர் முதலில் அறிந்துகொண்டார். அதுதொடர்பான கலந்துரையாடலுக்குப் பிறகு கள ஆய்வு மேற்கொள்ளத் திட்டமிட்டார். ஆய்வின்போது பல்வேறு இடங்களில் பழமையான சிற்பங்களையும் கோவில்களையும் கண்டறிந்தார்.

செல்வராஜுவின் முயற்சிகள், பழமையான சிலைகளையும் கோவில்களையும் மக்கள் அறிந்துகொள்ள உதவுகின்றன. கடந்த காலத்துடன் இணைவதற்கும், நமது பாரம்பரியத்தை இன்னும் சிறப்பாகப் புரிந்துகொள்வதற்கும் இது சுவாரஸ்யமான வழியாக அமைந்துள்ளது.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

## மதுரையில் முதல்-அமைச்சர் விஜய்; நகர் முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு!



மதுரை, செப். 27–

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை தொடங்கி வைப்பதற்காக முதல்–அமைச்சர் விஜய், (திங்கட்கிழமை) மதுரை செல்கிறார்.

தமிழக முதல்–அமைச்சராக பதவி ஏற்ற பின்பு முதன்முறையாக விஜய், (திங்கட்கிழமை) மதுரை செல்ல உள்ளார். த.வெ.க.வின் முக்கிய வாக்குறுதிகளில் ஒன்றான அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தலா ஒரு கிராம் எடையில், தாய்மாமன் தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் தொடங்கி வைக்கிறார். இதற்காக அவர் அன்றைய தினம் தனி விமானத்தில் சென்னையில் இருந்து புறப்பட்டு, பகல் 11.30 மணி அளவில் மதுரை விமான நிலையம் வந்து, அங்கிருந்து காரில், மதுரை அரசு மருத்துவமனைக்குச் செல்கிறார். அங்கு நடைபெறும் விழாவில், தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை முதல்–அமைச்சர் தொடங்கி வைக்கிறார்.

தொடர்ந்து மகப்பேறு சிகிச்சை வார்டுக்கு சென்று பிறந்த குழந்தைகளுக்கு மோதிரங்களை அணிவிக்க இருக்கிறார். இதையொட்டி அரசு மருத்துவமனையில் ஏற்பாடுகள் தடபுடலாக நடக்கின்றன. கட்டிடங்களுக்கு வர்ணம் பூசப்பட்டு, மருத்துவமனை வளாகம் புதுப்பொலிவு பெற்றுள்ளது. மதுரையின் முக்கிய அடையாளங்களில் ஒன்றான மகாத்மா காந்தி அருங்காட்சியகத்தில் சீரமைப்புப் பணிகள் பல மாதங்களாக நடந்தன.

சீரமைப்பு பணிகள் முடிந்து, காந்தி அருங்காட்சியகம் திறப்பு விழாவுக்கு தயாராக உள்ளது. முதல்–அமைச்சர் விஜய், காந்தி அருங்காட்சியகத்தை பார்வையிட இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. அங்கும் ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. இதையடுத்து அரசு சுற்றுலா மாளிகை அல்லது தனியார் ஓட்டலில் தங்கி விஜய் சற்று நேரம் ஓய்வு எடுக்கிறார்.

மாலை 4 மணிக்கு மேல் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்ய உள்ளார். கோவில் கும்பாபிஷேகம் கடந்த 17–ந்தேதி நடை பெற்ற நிலையில், அவர் அங்கு சென்று தரிசிப்பது முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் நீண்ட இடைவெளிக்கு பின்பு தமிழக முதல்–அமைச்சராக இருப்பவர், மீனாட்சி அம்மன் கோவிலுக்கும் செல்ல இருக்கிறார். முதல்– அமைச்சர் வருகையையொட்டி மதுரை நகர் முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

அழகர்கோவில் சாலையில் உள்ள அரசு சுற்றுலா மாளிகையில் இருந்து, அரசு மருத்துவமனை மற்றும் காந்தி அருங்காட்சியகம் செல்லும் வழிகளில் சாலையின் இருபுறங்களிலும் இரும்பு தடுப்புகள் அமைக்கப்பட்டு வருகிறது.

அதே நேரத்தில் தாய்மாமன் தங்க மோதிர திட்ட தொடக்கவிழா மற்றும் காந்தி அருங்காட்சியகத்தை முதல்–அமைச்சர் பார்வையிடும் நிகழ்ச்சிகள் மட்டுமே தற்போது உறுதியாகி உள்ளதாக அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்தார்.

தலையங்கம்
மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 27.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
புரட்டாசி மாதம் 10-ம் தேதி

# செமிகண்டக்டர் உற்பத்தியில் இந்தியாவின் புதிய பயணம்!

குஜராத்தில் அமைக்கப்பட்டு வரும் நாட்டின் முதல் செமிகண்டக்டர் தொழிற்சாலை, 2028ஆம் ஆண்டில் செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனுடன் நாடு முழுவதும் மேலும் பத்து செமிகண்டக்டர் உற்பத்தி ஆலைகளை அமைக்கும் திட்டங்களும் பல்வேறு கட்டங்களில் உள்ளன. இத்துறையில் இந்தியா அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்து வருவது, நாட்டின் தொழில்நுட்ப எதிர்காலம் குறித்த புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்மார்ட்போன்கள், கணினிகள், மருத்துவ உபகரணங்கள், பாதுகாப்புத் துறை சாதனங்கள், தரவு மையங்கள் உள்ளிட்ட பெரும்பாலான மின்னணு சாதனங்களின் செயல்பாட்டுக்கு செமிகண்டக்டர் சிப்கள் இன்றியமையாதவை. தகவல்களை சேமிக்கவும், மின்சார ஓட்டத்தை கட்டுப்படுத்தவும் இச்சிப்கள் முக்கியப் பங்காற்றுகின்றன.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, குவாண்டம் தொழில்நுட்பம், அணுசக்தி தொழில்நுட்பம் ஆகியவற்றுடன் செமிகண்டக்டர் தொழில்நுட்பமும் உலகின் எதிர்காலத்தை மாற்றக்கூடிய முக்கிய துறையாகக் கருதப்படுகிறது. தற்சார்பு இந்தியாவை உருவாக்குவதிலும், நாட்டின் தொழில்துறை வளர்ச்சியை விரைவுபடுத்துவதிலும் செமிகண்டக்டர் உற்பத்தி முக்கியப் பங்கு வகிக்கும்.

இதன் காரணமாக உள்நாட்டு செமிகண்டக்டர் உற்பத்தித் திறனை அதிகரிக்க மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. குஜராத்தின் தோலேராவில் நாட்டின் முதல் செமிகண்டக்டர் தொழிற்சாலை வேகமாக அமைக்கப்பட்டு வருகிறது. 2028ஆம் ஆண்டில் இந்த ஆலை செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைத் தவிர நாடு முழுவதும் மேலும் பத்து ஆலைகளை அமைக்கும் திட்டங்களும் முன்னேற்றத்தில் உள்ளன.

இந்தியாவை செமிகண்டக்டர் உற்பத்திக்கான முன்னணி மையமாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் வாயிலாக புதிய கண்டுபிடிப்புகள், முதலீடுகள், வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கான வாய்ப்புகள் உருவாகும். இந்திய செமிகண்டக்டர் சந்தையின் மதிப்பு 2031ஆம் ஆண்டில் ரூ.1.66 லட்சம் கோடியாக உயரும் என தொழில்துறை ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

டில்லியில் நடைபெற்ற ‘செமிகான் இந்தியா 2026’ மாநாட்டில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, ‘செமிகான் இந்தியா 2.0’ திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு ரூ.76,000 கோடியில் இருந்து ரூ.1.27 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதுவரை 12 சிப் உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்டத்தில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், செமிகண்டக்டர் துறையின் வளர்ச்சிக்கு முன் நிற்கும் சவால்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். செமிகண்டக்டர் ஆலைகள் 24 மணி நேரமும் தடையின்றி இயங்க வேண்டும். எனவே, உயர்தரமான தொடர்ச்சியான மின்சாரம் அவசியம். செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு மையங்களின் விரிவாக்கத்தால் மின் தேவை மேலும் அதிகரிக்க உள்ளது. இதனால் மின் உற்பத்தி மற்றும் மின் கட்டமைப்பில் பெரிய அளவிலான முதலீடுகள் தேவைப்படும்.

தண்ணீரும் மற்றொரு முக்கிய சவாலாகும். ஒரு பெரிய செமிகண்டக்டர் ஆலையில் நாளொன்றுக்கு ஐந்து கோடி லிட்டர் வரை தண்ணீர் பயன்படுத்தப்படலாம் எனக் கூறப்படுகிறது. எனவே, தண்ணீரை சுத்திகரித்து மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்தும் தொழில்நுட்பம் கட்டாயமாகிறது.

மனிதவள பற்றாக்குறையும் கவலைக்குரியதாக உள்ளது. சிப் வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் பரிசோதனைப் பிரிவுகளில் சுமார் மூன்று லட்சம் பொறியாளர்கள் பற்றாக்குறை இருப்பதாக தொழில்துறை அமைப்புகள் தெரிவித்துள்ளன. இதை சமாளிக்க உயர்கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் அரசு இணைந்து திறன் மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

மேலும், இந்தியா தற்போது பயன்படுத்தும் செமிகண்டக்டர்களில் 90 முதல் 95 சதவீதம் வரை இறக்குமதியைச் சார்ந்துள்ளது. சிறப்பு ரசாயனங்கள், தொழில்துறை வாயுக்கள், உற்பத்தி உபகரணங்கள், பேக்கேஜிங் மற்றும் பரிசோதனை வசதிகள் ஆகியவற்றுக்கான உள்நாட்டு விநியோகத் தொடரையும் உருவாக்க வேண்டியுள்ளது. செமிகண்டக்டர் உற்பத்தியில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளது. ஆனால் உலகளாவிய உற்பத்தி மையமாக மாறுவதற்கு முதலீடுகள் மட்டும் போதாது. தடையற்ற மின்சாரம், போதுமான தண்ணீர், திறமையான மனிதவளம், வலுவான ஆராய்ச்சி சூழல் மற்றும் முழுமையான உள்நாட்டு விநியோகத் தொடர் ஆகியவை அவசியம்.

இந்த சவால்களை ஒருங்கிணைந்த முறையில் எதிர்கொண்டு, நீண்டகாலத் திட்டத்துடன் செயல்பட்டால், செமிகண்டக்டர் துறையில் இந்தியா உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக உயர முடியும். தற்சார்பு இந்தியா என்ற இலக்கை நோக்கி நகரும் பயணத்தில், செமிகண்டக்டர் உற்பத்தி ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமையட்டும்.

**எழுதியவர்:**
**ஆசிரியர் மதுரை மணி**



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித்துறை சார்பில் மாதாந்திர மாவட்ட பள்ளிக் கல்வி செயல்பாடுகள் குறித்த மீளாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தலைமையில் நடைபெற்றது.

# தேனி மாவட்டத்தில் எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம் கலெக்டர் தலைமையில் நடந்தது!

தேனி, செப். 27–

மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, எரிவாயுநுகர்வோர்களுக்கு சிலிண்டர் வழங்குவதில் காணப்படும் காலதாமதம் மற்றும் எரிவாயு நுகர்வோர் குறைபாடுகளை களையும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் தேனி மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து எண்ணெய் நிறுவன எரிவாயு முகவர்கள், எண்ணெய் நிறுவன மேலாளர்கள் மற்றும் எரிவாயு நுகர்வோர்கள் ஆகியோர்கள் கலந்துகொள்ளும் எரிவாயு நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம் வருகின்ற 28.09.2026 – ஆம் தேதி பிற்பகல் 4.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடத்தப்பட உள்ளது.

இக்கூட்டத்தில் எரிவாயு நுகர்வோர்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதம் மற்றும் நுகர்வோர் குறைகளைப் பதிவுசெய்து, நடவடிக்கை எடுப்பதில் எரிவாயு முகவர்களின் கவனக்குறைவு போன்ற குறைபாடுகள் தொடர்பான புகார்களைக் பெற்று உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

இக்குறை தீர்க்கும் கூட்டத்தில் எரிவாயு நுகர்வோர்கள் தங்களது புகார்கள் குறித்து தீர்வு பெற்றுக்கொள்ளலாம் என்பதால் அனைத்து நுகர்வோர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் நடவடிக்கை குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் தெரிவித்துள்ளார்.

# தென்னிலை அருகே புதிய சுங்கச்சாவடி அமைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும்: கரூர் எம்.பி.அமைச்சருக்கு கோரிக்கை!



கரூர், செப். 27–

தென்னிலை அருகே புதிய சுங்கச்சாவடி அமைக்கும் திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று கரூர் எம்பி அமைச்சருக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளார்.

இது குறித்து கரூர் எம்பி ஜோதிமணி மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் நிதின் கட்காரிக்கு அனுப்பி உள்ள மனுவில் கூறியிருப்பதாவது:–

கரூர் – கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையில், தென்னிலை (நால்ரோடு சந்திப்புக்கு முன்பு) அருகே இந்தச் சுங்கச்சாவடி அமைக்கப்பட்டால் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.இதில்

கரூர் மற்றும் க.பரமத்தி உள்ளூர் சந்தைகளுக்கு அன்றாடம் சென்று வரும் நமது விவசாயிகள், விவசாயக் கூலிகள் மற்றும் சிறு வியாபாரிகள் பெரும் பொருளாதாரச் சுமைக்கு தள்ளபடுவர். கரூர் ஜவுளி நிறுவனங்களிடம் இருந்து ஆர்டர்களைப் பெற்று, பெட்ஷீட் போன்ற பொருட்களை உற்பத்தி செய்து சிறிய சரக்கு வாகனங்களில் கொண்டு செல்லும் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த விசைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும்.

கோயம்புத்தூர் நோக்கி நீண்ட தூரப் பயணம் மேற்கொள்ளாமல், உள்ளூர் கோவில்கள் மற்றும் அன்றாடத் தேவைகளுக்காகக் குறுகிய தூரப் பயணங்களை மட்டுமே மேற்கொள்ளும் கிராம மக்கள் மீது சுங்கக்கட்டணம் வசூலிப்பது முற்றிலும் நியாயமற்றது.

கரூர் தொகுதி மக்களின் நியாயமான இந்தக் கோரிக்கையை ஒன்றிய அரசு கவனத்தில் கொண்டு, இந்தத் திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும்.இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் லி.மதுபாலன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி–1 மற்றும் தொகுதி–1A) முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.


# திருப்பூர் மாவட்டத்தில் டெங்கு கொசுப்புழு இருப்பது கண்டறியப்பட்டால் அபராதம்: மாவட்ட ஆட்சித்தலைவ மனிஷ் நாரணவரே தகவல்!

திருப்பூர், செப். 27–

திருப்பூர் மாவட்ட பகுதியில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. மழைக்காலம் தொடங்கியதை அடுத்து கொசு உற்பத்தி அதிகரிக்கும் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் டெங்கு பாதிப்பு அதிகமாக இருக்கும். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சார்பில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் தீவிரப் படுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சி, நகராட்சி மற்றும் கிராமப் பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் டெங்கு கொசுப்புழுக்கள் இருப்பது கண்டறியப்பட்டால் அபராதம் விதிக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் தகவல் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் பாதிப்புகளை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வீடுகள் பள்ளி மற்றும் கல்லூரி வளாகத்தில் உள்ள புல் மற்றும் புதர்களை நீக்கம் செய்ய வேண்டும். மேலும் முதிர் கொசு ஒழிப்பு பணியாக புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை வாரம் ஒருமுறை நன்றாகத் தேய்த்து கழுவி நீர் பிடித்தபின் காற்று புகாதவாறு மூடி வைக்க வேண்டும். வீட்டினை சுற்றி உள்ள இடங்கள் மற்றும் வீட்டின் மொட்டை மாடிகளில் கிடக்கும் தேவையற்ற பொருட்களான பழைய டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள், தேங்காய் சிரட்டைகள், உடைந்த பூந்தொட்டிகள் போன்றவற்றில் கொசு புழுக்கள் உற்பத்தியாக வாய்ப்பு உள்ளது.

வணிக நிறுவனங்கள் மற்றும் வீடுகள் தோறும் கொசு ஒழிப்பு பணியாளர்கள் வீடு வீடாக ஆய்வு செய்ய வரும் பொழுது பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும். அவிநாசியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் கொசு புழு உற்பத்தியாகும் வகையில் சுகாதாரம் இன்றி இருந்ததால் ரூ.2000 அபராதம் விதிக்கப்பட்டது. இதுவரை 495 பொது சுகாதார நோட்டீஸ் வழங்கப்பட்டு ரூ.12000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே தெரிவித்துள்ளார்கள்.



# 2027 வரை இவர்களுக்கு சனியால் ஜாக்பாட்!



ஜோதிடத்தில் சனியின் பெயர்ச்சி மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. அவர் தற்பொழுது மீன ராசியில் வக்ர நிலை எனும் பின்னோக்கி நகர்ந்து வருகின்றார். ரேவதி நட்சத்திரத்தில் இருக்கக்கூடிய சனி பகவான் அக்டோபர் ஒன்பதாம் தேதி முதல் பின்னோக்கி நகர்ந்து, சனி நட்சத்திரமான உத்திரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சாரம் செய்ய உள்ளார்.

ஜோதிடம் கணக்கீட்டின்படி சனி பகவான் ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு பெயர்ச்சி ஆகும்போது மட்டும் அல்லாமல், அவருடைய நட்சத்திர பெயர்ச்சியின்போதும் கூட சில ராசிகளுக்கு பலன்கள் சட்ட சாதகமாக மாற வாய்ப்பு உண்டு. எந்தெந்த ராசியில் பல விஷயங்களை முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை பெறுவார்கள் என தெரிந்து கொள்வோம்.

**கும்ப ராசி**



கும்ப ராசி சேர்ந்தவர்களுக்கு சனி உத்திரட்டாதி நட்சத்திர பிரதேசமானது உங்களுடைய தொழில் மற்றும் வியாபாரம் தொடர்பான சில முக்கியத்துவம் வாய்ந்த பலனை தரக்கூடியதாக இருக்கும். உங்களுடைய வார்த்தைகள், மற்றும் யோசனைகள் மூலம் அங்கீகத்தை பெறுகிறீர்கள். பணியில் உங்களுடைய திறமையை வெளிப்படுத்தவும், புதிய வாய்ப்புகளை பெற முடியும். தொழிலதிபர்களுக்கு பழைய தொடர்புகளால் நல்ல வாய்ப்புகளை பெறலாம். இந்த காலம் லாபம் தரக்கூடியதாக அமையும். காதல் வாழ்க்கையில் நேர்மறையான முன்னேற்றங்களை காண்பீர்கள். ஆன்மீகத்தின் மீதான ஆர்வம் அதிகரிக்கும்.

**மகர ராசி**



மகர ராசி அன்பர்களுக்கு சனி நட்சத்திர பெயர்ச்சியானது முன்னேற்றத்தை பெறுவதற்கான புதிய வழிகள் கிடைக்கும். பணியிடத்தில் உங்களுடைய கடின உழைப்பிற்கான அங்கீகாரம் மற்றும் அந்தஸ்து பெறுவீர்கள். குடும்பத்தினரிடம் இணக்கமான சூழல் இருக்கும். அதுமட்டுமல்லாமல் அவர்களுடைய ஆதரவின் மூலம் முக்கிய பணிகளை முடிக்க முடியும். தொழிலை விரிவு படுத்துவதற்கான திட்டமிடல் நல்ல வாய்ப்புகளை தரக்கூடியதாக இருக்கும். செல்வாக்கு மிக்க நபர்களின் தொடர்புகள் நன்மை தரும். உங்களுடைய நிதி நிலைமை மேம்படுவதோடு, சமூகத்தில் மரியாதையும் அதிகரிக்கும்.

**மிதுன ராசி**



மிதுன ராசி சேர்ந்தவர்களுக்கு உத்திரட்டாதி நட்சத்திரத்தில் சனி சஞ்சாரம் செய்யக்கூடிய காலத்தில் உங்களுடைய தொழில், நிதி சார்ந்த விவகாரங்களில் புதிய வாய்ப்புகளை பெறுவீர்கள். வேலையில் கூடுதல் பொறுப்புகள் எடுத்து செய்து முடிப்பீர்கள். முக்கிய திட்டங்களை வழிநடத்துவதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். உங்களுடைய செயல் திறன் மேலதிகாரிகளால் பாராட்டப்படக்கூடும். தொழில் செய்யக்கூடியவர்கள் புதிய நபர்களின் தொடர்புகள் மற்றும் வாய்ப்புகளை பெறுவீர்கள். நீண்ட காலமாக உதிர்ந்த பணம் தொடர்பான பிரச்சனைகள் நீங்கும். வருமானம் அதிகரிக்கும்.

**துலாம் ராசி**



துலாம் ராசி நண்பர்களுக்கு சனியின் நட்சத்திர பெயர்ச்சி தங்களுடைய தொழில் தொடர்பான நிலை தன்மையையும் முன்னேற்றத்திற்கும் ஒலிவகுக்கும். உங்களுடைய பொறுப்புகள் அதிகரிக்க கூடியதாக இருக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பது, திட்டங்கள் தீட்டுவது என முக்கிய வேலைகளை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழில் தொடர்பான புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கலாம். நிதி விவகாரங்களில் உங்களுடைய நிலைத்தன்மை அதிகரிக்க வாய்ப்பு உண்டு. முதலீடு செய்யவும், சேமிக்கவும் நல்ல காலமாக இருக்கும்.

**தனுசு ராசி**



தனுசு ராசி சேர்ந்தவர்களுக்கு சனியின் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சாரமானது உங்களுடைய தொழில் மற்றும் வியாபாரம் தொடர்பான புதிய திருப்பங்களை கொண்டு வரும். வேலை தேடக்கூடியவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். முக்கிய வகுப்பில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு, புதிய கிடைக்கலாம். தொழில் தொடர்பான புதிய திட்டங்களை வகுத்து செயல்படுவீர்கள். லாபம் ஏற்றக்கூடிய அற்புதமான சூழல் நிலவும். அது மட்டும் இல்லாமல் கடின உழைப்பிற்கான நற்பலனை பெறுவீர்கள்.

**ரிஷப ராசி**



ரிஷப ராசி சனி பகவானின் நட்சத்திர பெயர்ச்சி நன்மைகளை தரும். குறிப்பாக உங்களுடைய தொழில் மற்றும் நிதி சார்ந்த விஷயங்களில் புதிய வாய்ப்புகளை பெற முடியும். இந்த காலகட்டத்தில் உங்களுடைய வருமானம் அதிகரிக்கும். கடின உழைப்பு பலனளிக்க கூடியதாக இருக்கும். நீண்ட காலம் ஆக தடைபட்டு வந்த பணிகளை வேகமாக முடிக்க முடியும். வேலைக்கான முயற்சியில் இருப்பவர்களுக்கு அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ற நல்ல வாய்ப்பு கிடை க்கும். தொ ழில் முனைவோருக்கு புதிய வணிக வாய்ப்புகள் மற்றும் தொடர்புகளால் பயனடைவீர்கள். செல்வ செழிப்பு நிறைந்ததாக இருக்கும்.

குறிப்பு: இங்கு கொடுக்கப்பட்டுள்ள ஜோதிடத் தகவல்களும் தீர்வுகளும் ஜோதிடம் மற்றும் ஆன்மீக நம்பிக்கைகளின் அடிப்படையில் அமைந்தவை. இவற்றுக்கு எந்த அறிவியல் ஆதாரமும் இல்லை. இதை நம்பிக்கை மற்றும் தகவல் நோக்கங்களுக்காக மட்டுமே கருத்தில் கொள்ளவும். தனிப்பட்ட ஆலோசனை மற்றும் முழுமையான தகவல்களுக்கு ஒரு ஜோதிட நிபுணரை அணுகுவது சிறந்தது.

# 8-வது சம்பள கமிஷன்: சம்பள உயர்வு?




புதுடெல்லி, செப். 27–

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஒய்வூதியதாரர்கள் பெரிதும் எதிர்பார்க்கும் 8–வது சம்பள கமிஷனின் Fitment Factor இன்னும் இறுதி செய்யப்படவில்லை. தற்போது 7–வது சம்பள கமிஷனின்படி குறைந்தபட்ச அடிப்படை சம்பளம் மாதம் ரூ.18,000 ஆக உள்ளது. புதிய கமிஷனில் Fitment Factor 3 ஆக நிர்ணயிக்கப்பட்டால், குறைந்தபட்ச அடிப்படை சம்பளம் ரூ.54,000 ஆக உயர வாய்ப்புள்ளது. சில ஊழியர் மற்றும் ஓய்வூதியதாரர் அமைப்புகள் Fitment Factor–ஐ 3.83 முதல் 4 வரை நிர்ணயிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளன. ஆனால் மத்திய அரசு இதுவரை எந்த விகிதத்தையும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை. 8–வது சம்பள கமிஷன் தனது இறுதி அறிக்கையை 2027 மே மாதத்துக்குள் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னரே சம்பளம், ஓய்வூதிய உயர்வு உள்ளிட்டவை இறுதி செய்யப்படும். புதிய சம்பளத்தின் பணப் பலன்கள் 2028 ஜனவரி வாக்கில் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் ஒரு கோடிக்கும் அதிகமான மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பயனடைய வாய்ப்புள்ளது.




# எலும்புகளை இரும்பாக்கும் 5 சைவ உணவுகள்!



எலும்புகள் வலுவாக இருக்க கால்சியம், வைட்டமின் உள்ளிட்ட சத்துகள் நிறைந்த உணவுகளை தொடர்ந்து எடுத்துக்கொள்வது அவசியம். இதற்காக அசைவ உணவுகளை மட்டுமே நம்ப வேண்டியதில்லை.

விதைகள்: பூசணி, சியா உள்ளிட்ட விதைகளில் ஒமேகா-3 உள்ளிட்ட சத்துகள் உள்ளன.

பச்சைக் காய்கறிகள்: இலைக் காய்கறிகள் கால்சியம், வைட்டமின்-K போன்ற சத்துகளை வழங்குகின்றன.

பால் பொருட்கள்: பால், தயிர், பனீர் ஆகியவை கால்சியத்தின் முக்கிய ஆதாரங்கள்.

நட்ஸ்: கால்சியம், மெக்னீசியம், பாஸ்பரஸ் சத்துகள் கிடைக்க உதவுகின்றன.

பீன்ஸ்: கருப்பு பீன்ஸ், கிட்னி பீன்ஸ் உள்ளிட்டவற்றில் கால்சியம், மெக்னீசியம், பாஸ்பரஸ் உள்ளன. தினசரி உணவில் இவற்றை சரியான அளவில் சேர்த்துக்கொள்வது எலும்பு ஆரோக்கியத்தைப் பேண உதவும்.

## தாய்மாமன் திட்டம்: முதற்கட்டமாக 89,955 தங்க மோதிரங்களை தயாரித்து வழங்கிய ஜோய் ஆலுக்காஸ்!



சென்னை, செப். 27–

ஜோய் ஆலுக்காஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முதல் கட்டப் பணியின் அடிப்படையில் 89,955 தங்க மோதிரங்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. தயாரிக்கப்பட்ட மோதிரங்கள் ஒவ்வொன்றும் ஒரு கிராம் எடை மற்றும் 22 கேரட் தூய்மைத் தரத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு மோதிரத்திலும் பி.ஐ.எஸ். ஹால்மார்க் முத்திரை மற்றும் 6 இலக்க எச்.யு.ஐ.டி. எண் இடம்பெறும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக தயாரிக்கப்பட்டுள்ள 89,955 மோதிரங்கள், அதிக அளவில் பிரசவங்கள் நடைபெறும் 107 அரசு தாய்சேய் நல மையங்களுக்கு வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மோதிரங்களை பாதுகாப்பாக பேக்கிங் செய்து அனுப்பும் பணிகள் சென்னை மற்றும் கோவையில் உள்ள ஜோய் ஆலுக்காஸ் மையங்களில் நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஜோய் ஆலுக்காஸ் குழுமத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர் ஜோய் ஆலுக்காஸ் கூறுகையில், 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தில் தங்கள் நிறுவனம் இணைந்திருப்பதை பெருமையாக கருதுவதாகவும், தமிழக மக்களுக்கு சேவை செய்யும் வாய்ப்பு கிடைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டில் இனி கூட்டணி ஆட்சி முறைதான் நீடிக்கும்: திருமாவளவன்!

சென்னை, செப். 27–

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில், ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள ராஜரத்தினம் கலையரங்கத்தில் முப்பெரும் விழா நேற்று நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக கட்சியின் தலைவர் திருமாவளவன் கலந்து கொண்டார். தொடர்ந்து, இலக்கிய விருதுகள் பெற்றவர்களுக்கு திருமாவளவன் விருதுகளை வழங்கி, பேசியதாவது:–

எத்தனை எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், அமைச்சர்கள் பெற்றிருக்கிறோம் என்பது வலிமையின் அடையாளம் அல்ல. எந்த அளவுக்கு மக்களின் நம்பிக்கையை பெற்றிருக்கிறோம் என்பதுதான் வளர்ச்சியின் அடையாளம்.

நாம் த.வெ.க. அணியில் இடம்பெறாமல் போய் இருந்தால், த.வெ.க.வை வலதுசாரிகள் ஆக்கிரமிப்பதற்கான சூழல் இருந்தது. த.வெ.க. அதற்கு தயாராக இல்லை. த.வெ.க.வை அப்படி விட்டுவிடக்கூடாது என்ற பொறுப்புணர்வோடு வி.சி.க. இந்த முடிவை எடுத்திருக்கிறது என்று புரிந்து கொள்ளவேண்டும். உண்மை அதுதான். த.வெ.க. வெற்றி பெற்று விடக்கூடாது என்று நாம் பிரசாரம் கூட செய்தோம். நாம் இருக்கும் அணி வெற்றி பெற வேண்டும். ஆட்சியை பிடிக்க வேண்டும் என்று நாம் கருதினோம். 2026–ல் நம்முடைய கனவு நனவாகிற போது.., கூட்டணி ஆட்சி அமைய வேண்டும் என்பது விசிக–வின் கனவுகளில் ஒன்று.

தேர்தலுக்கு முன்பே தி.மு.க. தலைமையில் கூட்டணி ஆட்சி அமையும் என நான் விழுகுக செய்தேன். தொங்கு சட்டசபை உருவாக வாய்ப்பு இருக்கிறது. அந்த நேரத்தில் நான் சட்டசபையில் இருப்பது நல்லது. தமிழ்நாடு அரசியலில் இன்னும் தீவிரமாக செயல்படும் கனவோடு இருந்தேன். காலம் வேறு கணக்குகளை போட்டு, நம் கனவை நினைவாக்கி, கூட்டணி அரசை அமைத்தது. இனி கூட்டணி ஆட்சி முறைதான் தமிழ்நாட்டில் நீடிக்கும். இவ்வாறு பேசினார்.

# மதுராந்தகம், தாராபுரம் தொகுதியில் முந்தப்போவது யார்..?

சென்னை, செப். 27–

மதுராந்தகம், தாராபுரம் தொகுதியில் முந்தப்போவது யார்? என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. இடைத்தேர்தல் த.வெ.க.வுக்கு கைகொடுக்குமா?, கைவிடுமா? என்றும் பரபரப்பாக பேசப்படுகிறது.



தமிழகத்தில் கடந்த 59 ஆண்டு காலமாக ஆட்சிக் கட்டிலில் இருந்த தி.மு.க., அ.தி.மு.க. என்ற இருபெரும் திராவிட கட்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, கட்சி தொடங்கி 2½ ஆண்டுகளே ஆன த.வெ.க., கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது.

த.வெ.க.வுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்க இன்னும் 11 இடங்கள் (தற்போது இருப்பது 107, தேவை 118) தேவை என்ற நிலையில், தமிழகத்தில் காலியாக உள்ள 7 சட்டசபை தொகுதிகளில், மதுராந்தகம் (தனி), தாராபுரம் (தனி) ஆகிய தொகுதிகளுக்கு அடுத்த மாதம் (அக்டோபர்) 6–ந் தேதி இடைத்தேர்தல் நடைபெற இருக்கிறது. அக்டோபர் 9–ந் தேதி வாக்குகள் எண்ணப்பட இருக்கின்றன.

இரு தொகுதி இடைத்தேர்தலில் 5 முனைப்போட்டி நிலவுகிறது. மதுராந்தகம் தொகுதியில் மரகதம் குமரவேல் (த.வெ.க.), பரந்தாமன் (தி.மு.க.), கணிதா சம்பத் (அ.தி.மு.க.), சுகந்தி (மா.கம்யூ.), ஜானகிராமன் (நாம் தமிழர்) ஆகியோர் களத்தில் உள்ளனர்.

இதேபோல், தாராபுரம் தொகுதியில் சத்யபாமா (த.வெ.க.), சுகன்யா (தி.மு.க.), பானுமதி (அ.தி.மு.க.), லட்சுமணன் (இ.கம்யூ.), கார்த்திகா (நாம் தமிழர்) ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

வாக்குப்பதிவுக்கு இன்னும் 8 நாட்களே உள்ள நிலையில், மதுராந்தகம் தொகுதியில் 27 வேட்பாளர்களும், தாராபுரம் தொகுதியில் 22 வேட்பாளர்களும் களத்தில் உள்ளனர். பொதுவாக, இடைத்தேர்தல் என்பது ஆளுங்கட்சியை எடைபோடும் தேர்தல் என்று சொல்வார்கள்.

அந்த வகையில், கடந்த 4 மாத கால த.வெ.க. அரசின் செயல்பாடு எப்படி? என்பதை ஆராய்ந்து, மதுராந்தகம், தாராபுரம் தொகுதி மக்கள் வாக்களிக்க இருக்கின்றனர்.

இடைத்தேர்தல் நடைபெற உள்ள மதுராந்தகம் தொகுதியில் மொத்தம் 2 லட்சத்து 13 ஆயிரத்து 788 வாக்காளர்கள் உள்ளனர். இதில், பெண் வாக்காளர்கள் 1 லட்சத்து 8 ஆயிரத்து 797 பேரும், ஆண் வாக்காளர்கள் 1 லட்சத்து 4 ஆயிரத்து 926 பேரும், மூன்றாம் பாலினத்தவர் 65 பேரும் அடங்குவார்கள்.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கும் தற்போது நடைபெறும் இடைத்தேர்தலுக்கும் மத்தியில் புதிதாக 1,152 வாக்காளர்கள் (ஆண்கள் 430, பெண்கள் 722) இணைந்துள்ளனர். மொத்தத்தில் ஆண் வாக்காளர்களைவிட பெண் வாக்காளர்களே அதிகமாக உள்ளனர்.

தாராபுரம் தொகுதியில் மொத்தம் 2 லட்சத்து 22 ஆயிரத்து 406 வாக்காளர்கள் உள்ளனர். இதில், பெண் வாக்காளர்கள் 1 லட்சத்து 15 ஆயிரத்து 523 பேரும், ஆண் வாக்காளர்கள் 1 லட்சத்து 15 ஆயிரத்து 523 பேரும், மூன்றாம் பாலினத்தவர் 8 பேரும் அடங்குவார்கள்.

கடந்த 4 மாதங்களில் மட்டும் 663 பேர் வாக்காளர் பட்டியலில் புதிதாக இணைந்துள்ளனர். இந்தத் தொகுதியிலும் ஆண் வாக்காளர்களைவிட பெண் வாக்காளர்களே அதிகமாக உள்ளனர். மொத்தத்தில் இரு தொகுதிகளிலும் பெண்களே வெற்றியை தீர்மானிக்க உள்ளனர்.

ஏற்கனவே, மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் தபால் ஓட்டுப்பதிவு முடிந்துள்ளது. மதுராந்தகம் தொகுதியில் 80 வயதுக்கு மேலான வாக்காளர்கள் 451 பேரும், மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் 480 பேரும் என மொத்தம் 931 பேர் வாக்களித்துள்ளனர். இதேபோல், தாராபுரம் தொகுதியில் 1,201 பேர் தபால் ஓட்டு போட்டுள்ளனர்.

இந்த இரு தொகுதி இடைத்தேர்தல் வெற்றி என்பது ஆளுங்கட்சி த.வெ.க.வுக்கு முக்கிய தேவையாக உள்ளது. அதே நேரத்தில், எதிர்க்கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க. ஆகியவை, எப்படியாவது ஜெயித்துவிட்டால், எதிர்வரும் இடைத்தேர்தல்களிலும் நமக்கு சாதகமான சூழ்நிலை நிலவும் என்று நினைக்கிறது. மேலும், த.வெ.க. அரசை கவிழ்க்க முடியும் என்றும் நம்புகிறது.

ஆனால், மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு தொகுதிகளில், வெற்றியை தீர்மானிக்கும் சக்தியாக பெண்கள் இருக்கும் நிலையில், அவர்களிடம் யாருக்கு ஓட்டு போடுவீர்கள்? என்று கருத்து கேட்கப்பட்டபோது, பெரும்பாலானோர் த.வெ.க.வுக்குத்தான் என்று நம்பிக்கையுடன் தெரிவித்தனர்.

"தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு சரியில்லை என்று கூறப்படுகிறதே?" என்று அவர்களிடம் கேட்கப்பட்டபோது, "கடந்த ஆட்சியிலும் இப்படித்தான் இருந்தது. தி.மு.க., அ.தி.மு.க. ஆட்சிக்கு த.வெ.க. ஆட்சி சற்று பரவாயில்லை" என்றே தெரிவித்தனர். இதைவைத்து பார்க்கும்போது, பெண்களின் ஓட்டு த.வெ.க.வுக்கு அதிகம் கிடைக்கும் என்று தெரிகிறது.

அதே நேரத்தில், ஆண்களின் ஓட்டு தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க. என சிதறும் நிலையே உள்ளது. குறிப்பாக, த.வெ.க. அரசு மீது வெறுப்புடன் இருப்பது தெரிகிறது. "தேர்தல் வாக்குறுதியில் சொன்னது ஒன்று, செய்வது ஒன்று" என்று அவர்கள் சலிப்புடன் கூறுகின்றனர்.

இரு தொகுதி வாக்காளர்களின் மனநிலை இவ்வாறு இருந்தாலும், தலைவர்களின் பிரசாரத்தை பொறுத்து இவை மாறக்கூடும். அந்த வகையில், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஏற்கனவே பிரசாரத்தை தொடங்கிவிட்டார். த.வெ.க. தலைவரும், முதல்–அமைச்சருமான ஜோசப் விஜய்யும் பிரசாரத்தை ஆரம்பித்துவிட்டார். அடுத்து, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் விரைவில் பிரசாரத்தை தொடங்க இருக்கிறார். தலைவர்களின் பிரசாரம் வாக்காளர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், அவை கட்சிகளின் வாக்கு சதவீதத்திலும் ஏற்ற, இறக்கத்தை காட்டும் என்று கூறப்படுகிறது.

மொத்தத்தில், இடைத்தேர்தலில் பொதுத்தேர்தலைவிட போட்டி பலமாக இருக்கும் என்றே தெரிகிறது. இருந்தாலும் ஆளுங்கட்சியான த.வெ.க.வின் கையே தற்போது வரை ஓங்கியிருப்பதாக தெரிகிறது.

## ஆர்.டி.ஐ. சட்டத்தில் இருந்து சட்டம்-ஒழுங்கு பிரிவுக்கு விலக்கு அளித்து தமிழக அரசு அரசாணை!

சென்னை, செப். 27–

ஆர்.டி.ஐ. சட்டத்தில் இருந்து பொது துறையிலுள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவுக்கு விலக்கு அளித்து தமிழக அரசு அரசாணை பிறப்பித்து உள்ளது.



தமிழக அரசு வெளியிட்டு உள்ள அரசாணையில், பொது துறையின் கீழுள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான தகவல்களை பெறுவதில் கட்டுப்பாடு விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. உளவு மற்றும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் அமைப்பாக அறிவித்து இந்த விலக்கு அளிக்கப்படுகிறது.

இதனால், சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான விசாரணை ஆணையம் தொடர்பான நியமனங்கள், வகுப்புவாத, சாதிய மோதல்கள், காவல் துறையின் கைது நடவடிக்கைகள், போலீஸ் காவல், கைதிகளின் மரணம், போலீஸ் விசாரணை அறிக்கைகள் பெறுவதிலும் கட்டுப்பாடு விதிக்கப்படும்.

சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான மாதாந்திர சீராய்வு கூட்டம், தலைமை செயலாளர் அறிவுறுத்தலின் பேரிலான சிறப்பு சட்டம் மற்றும் ஒழுங்கு கூட்டங்கள் உள்ளிட்ட விவரங்களை பெறுவதிலும் இந்த கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும்.

இதன்படி, மக்களவை மற்றும் மாநிலங்களவைகளில் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்கள், மாணவர், விவசாயி மற்றும் அரசியல் கட்சியினர் உள்ளிட்டோரின் போராட்டம், அவதூறு கட்டுரைகள், செய்தி துணுக்குகள், பேச்சுகள் உள்ளிட்ட விசயங்கள் தொடர்பான தகவல்களையும் பெற முடியாது.

சட்டம் மற்றும் ஒழுங்கு விசயத்தில், அனைத்து தகவல்களையும் மக்களுக்கு வழங்க முடியாது என தெரிவித்து, சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான விசயத்தில், இந்த முக்கிய முடிவை தமிழக அரசு எடுத்துள்ளது.

# கொடைக்கானலுக்கு படையெடுத்த சுற்றுலா பயணிகள்!

கொடைக்கானல், செப். 27–

கொடைக்கானல் மலைப்பகுதிகளை அலங்கரிக்கும் வண்ணம் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் சொரி மலர்கள் பூத்துக்குலுங்கும். அதன்படி தற்போது மலைப்பகுதியில் அதிக அளவில் கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் சொரி மலர்கள் பூத்து குலுங்குகின்றன. குளுமையான கால நிலையுடன் பூத்து குலுங்கும் சொரி மலர்களை கண்டு ரசித்த சுற்றுலா பயணிகள் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.



மலைகளின் இளவரசியான கொடைக்கானலுக்கு தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்கள், வெளி நாடுகளில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். தமிழகத்தில் தற்போது பள்ளிகளுக்கு காலாண்டு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதாலும், தரைப்பகுதியில் வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதாலும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து சுற்றுலா பயணிகள் குவிந்தனர். மேலும் அண்டை மாநிலமான கேரளாவில் இருந்து அதிக அளவில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், வாலிபர்கள் வந்திருந்தனர்.

இதனால் இன்று காலை முதலே மலைச்சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் அணிவகுத்து நின்றன. முக்கிய சுற்றுலா இடங்களான வெள்ளி நீர்வீழ்ச்சி முன்பு புகைப்படம், செல்பி எடுத்துக் கொண்டனர். மேலும் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள தூண்பாறை, பசுமை பள்ளத்தாக்கு பைன் பாரஸ்ட், குணா குகை, மோயர் பாயிண்ட், கோக்கர்ஸ் வாக், பிரையண்ட் பூங்கா, ரோஜா பூங்கா உள்ளிட்ட இடங்களிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது.

இங்கு இதமான குளிருடன் நிலவும் கால நிலையை அனுபவிக்க காலை நேரத்தில் சுற்றுலா பயணிகள் ஏரிச்சாலையை சுற்றி நடை பயிற்சி மேற்கொண்டனர். மேலும் நட்சத்திர ஏரியில் படகு சவாரியும், ஏரிச்சாலையில் சைக்கிள் மற்றும் குதிரை சவாரியும் செய்து மகிழ்ந்தனர். வார இறுதி நாட்கள் உள்ளிட்ட விடுமுறை நாட்களில் கூடுதல் போலீசாரை நியமித்து போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதே போல் மேல்மலை கிராமங்களான மன்னவனூர், பூண்டி, கிளாவரை, பூம்பாறை பகுதிகளுக்கும் சென்ற சுற்றுலா பயணிகள் அங்கு பசுமை புல்வெளி, ஆடு, முயல் ஆராய்ச்சி பண்ணை, எழும்பள்ளம் ஏரி, சாகச விளையாட்டு போட்டிகள் ஆகியவற்றை கண்டு ரசித்தனர்.

கொடைக்கானல் மலைப்பகுதிகளை அலங்கரிக்கும் வண்ணம் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் சொரி மலர்கள் பூத்துக்குலுங்கும். அதன்படி தற்போது மலைப்பகுதியில் அதிக அளவில் கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் சொரி மலர்கள் பூத்து குலுங்குகின்றன. குளுமையான கால நிலையுடன் பூத்து குலுங்கும் சொரி மலர்களை கண்டு ரசித்த சுற்றுலா பயணிகள் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர். இந்த பூக்கள் 2 மாதங்களுக்கு பசுமை போர்த்திய மலைப்பகுதிகளில் இளஞ்சிவப்பு நிற மலர்கள் கூடிவது போல் அதிக அளவில் பூக்கும். இது கொடைக்கானல் வரும் சுற்றுலா பயணிகளை மிகவும் உற்சாகமடைய செய்துள்ளது.

# வேலை வாய்ப்பு

## தெற்கு ரயில்வேயில் 62 காலியிடங்கள்!

தெற்கு ரயில்வே, RRC–02/Sports/2026–27 அறிவிப்பின் கீழ், நிரந்தர அடிப்படையில் 62 விளையாட்டு வீரர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

முக்கிய விவரங்கள்:
நிறுவனம்: தெற்கு ரயில்வே
வேலைவகை: மத்திய அரசு வேலை
காலியிடங்கள்: 62
பணியிடம்: சென்னை
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் – https://iroams.com/
விண்ணப்ப தொடக்க தேதி: 26.09.2026
கடைசி தேதி: 25.10.2026
அதிகாரப்பூர்வ இணையதளம்: iroams.com

தகுதியான விளையாட்டு வீரர்கள் அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். கல்வித் தகுதி, வயது வரம்பு, விளையாட்டு சாதனை, தேர்வு முறை மற்றும் விண்ணப்பக் கட்டணம் உள்ளிட்ட முழுமையான விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பை கவனமாகப் பார்க்கவும்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தாலுகா கடமலை குண்டு–மயிலாடும்பாறை ஒன்றியம் தும்மக்குண்டு ஊராட்சியில் குழந்தைகள் நலம் சிறப்பு சேவைகள் துறை மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில், குழந்தைகள் நலனை பாதுகாக்கும் பொருட்டு கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம் நடைபெற்றது.

## தனியார் பால் விலை உயர்வு எதிரொலி: ஆவின் பாலுக்கு மேலும் தட்டுப்பாடு?



சென்னை, செப். 27–

ஆவினுக்கான பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.6 உயர்த்தி முதல்–அமைச்சர் விஜய் உத்தரவிட்டதை அடுத்து தமிழ்நாட்டைச் சேர்ந்த தனியார் பால் நிறுவனங்களும், அண்டை மாநில தனியார் நிறுவனங்களும் தங்களுக்கான பால் கொள்முதல் விலையை உயர்த்தின. இதனால் ஏற்பட்ட நிதி இழப்பை ஈடுசெய்ய தனியார் பால் நிறுவனங்கள் பால் விற்பனை விலையை உயர்த்தியுள்ளன. கடந்த 21–ந்தேதி ஆரோக்யா நிறுவனம் விலையை உயர்த்திய நிலையில், டோட்லா, ஹெரிடேஜ், திருமலா, சீனிவாசா, ஜெர்சி உள்ளிட்ட தனியார் நிறுவனங்களும் நேற்று முதல் பால் விலையை லிட்டருக்கு ரூ.4 வரையிலும், தயிர் விலையை கிலோவுக்கு ரூ.2–ம் உயர்த்தி உள்ளன. இதன்படி அரை லிட்டர் சமன்படுத்தப்பட்ட பால் ரூ.31–லிருந்து ரூ.32 ஆகவும், நிலைப்படுத்தப்பட்ட பால் ரூ.35–லிருந்து ரூ.37 ஆகவும், கொழுப்பு சத்து செறிவூட்டப்பட்ட பால் ரூ.40–லிருந்து ரூ.42 ஆகவும், ஒரு லிட்டர் சமன்படுத்தப்பட்ட பால் ரூ.59–லிருந்து ரூ.61 ஆகவும், நிலைப்படுத்தப்பட்ட பால் ரூ.68–லிருந்து ரூ.70 ஆகவும், கொழுப்பு சத்து செறிவூட்டப்பட்ட பால் ரூ.78–லிருந்து ரூ.81 ஆகவும், அரை கிலோ தயிர் ரூ.41–லிருந்து ரூ.42 ஆகவும், இருமுறை சமன்படுத்தப்பட்ட தயிர் ரூ.36–லிருந்து ரூ.37 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு தனியார் நிறுவனங்கள் பால் விலையை 3–வது முறையாக உயர்த்தி உள்ளன. இதன்மூலம் ஒரே ஆண்டில் லிட்டருக்கு ரூ.10 வரை தனியார் பால் பாக்கெட் விலைகள் அதிகரித்து இருக்கிறது. இந்த விற்பனை விலை உயர்வு காரணமாக ஆவினுக்கும், தனியார் பாலுக்குமான விற்பனை விலை வித்தியாசம் சராசரியாக குறைந்தபட்சம் ரூ.14 முதல் அதிகபட்சமாக ரூ.30 வரை ஒரு லிட்டருக்கு விற்பனை விலை வித்தியாசம் ஏற்பட்டுள்ளது.

இதனால் ஏழை, எளிய, நடுத்தர மக்களின் கவனம் ஆவின் மீது திரும்பக் கூடும் என்பதால் தற்போதைய சூழலில் தமிழ்நாடு முழுவதும் ஆவின் பால் தட்டுப்பாடு மேலும் கூடுதலாகும் சூழல் உருவாகியுள்ளது.





இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881





## இன்றைய கார்ட்டூன்




நையாண்டிச் சித்திரம்

# எஸ்.ஐ.ஆர்.: வீடு தேடி ஆவணச் சேகரிப்பு! டெல்லி, மகாராஷ்டிராவில் காலக்கெடு நீட்டிப்பு!




சென்னை, செப். 27–

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தில் (எஸ்.ஐ.ஆர்.) நோட்டீஸ் பெற்றவர்களின் வீடுகளுக்குச் சென்று ஆவணங்களைச் சேகரிக்கத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. 'இ.சி.ஐ. நெட்' இணையதள அமைப்பை ஆய்வு செய்ய நிபுணர் குழு அமைக்கவும் முடிவு செய்துள்ளது.

**வீட்டிலேயே ஆவணங்களை வழங்கலாம்**

முந்தைய பதிவுகளுடன் இணைக்கப்படாத அல்லது தகவல் முரண்பாடுகளால் நோட்டீஸ் பெற்ற வாக்காளர்களிடம், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் நேரில் ஆவணங்களைப் பெற்று இணையதளத்தில் பதிவேற்றுவார்கள். அவற்றின் அடிப்படையில் வாக்காளர் பதிவு அதிகாரி முடிவெடுப்பார். பொதுவாக வாக்காளர்கள் விசாரணைக்கு நேரில் ஆஜராகத் தேவையில்லை.

விதிவிலக்கான சூழலில் மட்டும் விசாரணை நடத்தப்படும்; அதிலும் இணையவழிக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தேவைப்பட்டால், குடும்பத்தின் மூத்த உறுப்பினரைத் தங்கள் சார்பில் பங்கேற்க அனுமதிக்கலாம். தொழிலாளர்கள், ஏழைகள், வீடற்றவர்கள், இரவுநேரத் தங்குமிடங்களில் வசிப்போர் உள்ளிட்டோருக்கு உதவி மையங்களும் சிறப்பு முகாம்களும் அமைக்கப்படும்.

**புதிய காலக்கெடு**

**டெல்லி:** உரிமைகோரல்கள், ஆட்சேபனைகளை அளிக்க அக்டோபர் 30, 2026 வரை; தீர்வு காண நவம்பர் 30 வரை அவகாசம்.

**மகாராஷ்டிரா:** விண்ணப்பிக்க அக்டோபர் 12 வரை; தீர்வு காண நவம்பர் 10 வரை அவகாசம்.

**இ.சி.ஐ. நெட் ஆய்வுக்கு நிபுணர் குழு**

மூத்த துணைத் தேர்தல் ஆணையர் தலைமையில், ஐஐடி அல்லது ஐஐஐடியைச் சேர்ந்த சுயாதீன நிபுணர் இடம்பெறும் குழு, இணையதளத்தின் செயல்பாடுகளையும் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்ட தன்மையையும் ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும்.

அதிகாரிகளின் சட்டப்பூர்வப் பணிகளுக்கு ஏற்ப அணுகல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மாநிலங்களின் கருத்துகளின்படி மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணையம் தெரிவித்துள்ளது. கூடுதல் செயல்பாட்டு நெகிழ்வுகள் வழங்கப்படும்; புதிய தகவல் தொழில்நுட்ப முயற்சிகள், ஆணைய ஒப்புதலுக்கு முன் அதிகாரிகள் குழுவில் விவாதிக்கப்படும்.

தேர்தல் ஆணையர்கள் எஸ்.எஸ். சந்து, விவேக் ஜோஷி ஆகியோர் 10 மாதங்களில் குறைந்தது 14 முறை எஸ்.ஐ.ஆர். நடைமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்ட பின்னணியில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

**விடுபட்டவர்கள் பெயர் சேர்க்கலாம்**

பீகார், மேற்கு வங்கம் உள்ளிட்ட 20 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் எஸ்.ஐ.ஆர். முடிந்துள்ளது. விடுபட்டவர்கள், இளைஞர்கள், முதல்முறை வாக்காளர்கள் தொடர் புதுப்பித்தல் முறையில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம். கோவாவில் விடுபட்ட 97 பேரில் 81 பேர் ஏற்கெனவே படிவம் 6 பூர்த்தி செய்துள்ளனர்; வீடுதோறும் ஆய்வுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

செப்டம்பர் 26 கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்த முடிவுகளுக்கு முழுத் தேர்தல் ஆணையமும் ஒப்புதல் அளித்துள்ளது.




தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சி. முத்துக்குமரன் மற்றும் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சத்யா ஆகியோர், மணவாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ மாணவியர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினர். உடன் கரூர் மாநகராட்சி ஆணையர் எம்.பிரித்திவிராஜ் உள்ளார்.

## சினிமா துளிகள்..!

### விஜய் Vs விஜய் சேதுபதி! அக். 1–ல் திரையரங்குகளில் மோதல்!





விஜய்யின் 'திருப்பாச்சி' மறுவெளியீடும், விஜய் சேதுபதியின் புதிய படமான 'பத்தா'வும் அக்டோபர் 1–ஆம் தேதி திரைக்கு வருவதால் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

விஜய்த்ரிஷா நடிப்பில் 2005–ல் வெளியாகி வெற்றி பெற்ற 'திருப்பாச்சி', 21 ஆண்டுகளுக்குப் பிறகு மறுவெளியீடு காண்கிறது. அதே நாளில், பாலாஜி தரணீதரன் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்துள்ள 'பத்தா' வெளியாகிறது. 1960–களைக் கதைக்களமாகக் கொண்ட இப்படத்தின் பாடல்கள் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன.

'மாஸ்டர்' படத்தில் நாயகன்வில்லனாக மோதிய விஜய்யும் விஜய் சேதுபதியும், இப்போது தங்கள் படங்களின் வெளியீட்டால் மீண்டும் போட்டியிடுவதாக ரசிகர்கள் கூறுகின்றனர். இதனிடையே, விஜய்யின் மகன் ஜேசன் சஞ்சய் இயக்கத்தில் சந்தீப் கிஷன் நடித்துள்ள 'சிக்மா', அக்டோபர் 2–ஆம் தேதி வெளியாகிறது. அடுத்தடுத்த நாள்களில் வெளியாகும் இந்த மூன்று படங்களும் திரையரங்குகளில் போட்டியை ஏற்படுத்தவுள்ளன.

### அப்போலோவில் உபாசனாவுக்கு முக்கியப் பொறுப்பு! மருத்துவமனை விரிவாக்கத்தை முன்னெடுக்கும் ராம் சரண் மனைவி!



அப்போலோ மருத்துவமனைகளின் திட்டங்களுக்கான இயக்குநராக (Director Projects) உபாசனா காமினேனி கொனிடெலா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நடிகர் ராம் சரணின் மனைவியும், அப்போலோ நிறுவனர் டாக்டர் பிரதாப் சி. ரெட்டியின் பேத்தியுமாவார்.

இந்தியா முழுவதும் புதிய மருத்துவமனைகளை அமைத்தல், ஏற்கெனவே உள்ள மருத்துவமனைகளை விரிவுபடுத்தி மேம்படுத்துதல், நோயாளிகள் மருத்துவச் சேவைகளை எளிதாக அணுகுவதற்கான வசதிகளை உருவாக்குதல் ஆகிய பொறுப்புகளை அவர் மேற்கொள்வார்.

அப்போலோ தலைமை நிர்வாகம், மருத்துவக் குழுக்கள் மற்றும் திட்டப் பங்குதாரர்களுடன் இணைந்து, திட்டமிடல் முதல் மருத்துவமனை திறப்பு வரை பணிகளை ஒருங்கிணைப்பார். திட்ட மேலாண்மை, அறிக்கை தயாரித்தல் மற்றும் குழுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்துவார்.

நோயாளிகளுக்கான பகுதிகளில் ஒரே மாதிரியான வடிவமைப்புத் தரநிலைகள், தெளிவான வழிகாட்டிப் பலகைகள், எளிதான அணுகுவழிகள், திறமையான மருத்துவப் பிரிவு அமைப்பு ஆகியவற்றை உருவாக்குவதும் அவரது பணிகளில் அடங்கும். நோயாளிகளுக்கும் குடும்பத்தினருக்கும் வசதியான சூழலையும், மருத்துவக் குழுவினர் சிறப்பாகச் செயல்படத் தேவையான இடவசதிகளையும் உறுதிசெய்வார். இதுகுறித்து உபாசனா, உலகத்தரம் வாய்ந்த மருத்துவச் சேவைகள் இந்திய மக்களுக்கு எளிதில் கிடைக்க வேண்டும் என்ற தனது தாத்தாவின் நோக்கத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதே தனது பொறுப்பு எனத் தெரிவித்துள்ளார். மருத்துவமனை வடிவமைப்பு மனிதர்களை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு திட்டமும் உள்ளூர் மக்களுக்குப் பயனளிப்பதுடன் பணியாற்றுவோருக்கு அர்த்தமுள்ள வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். சிந்தனைமிக்க வடிவமைப்பு, அக்கறையான மருத்துவச் சேவை, இந்திய மருத்துவத் துறையின் சிறப்பு ஆகியவற்றை ஒருங்கிணைப்பதே தனது நோக்கம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# உலகப்புகழ் பெற்ற மதுரை மீனாட்சி–சுந்தரேஸ்வரர் திருக்கோவிலுக்கு வருகை தரும் தமிழக முதல்வர் கவனத்திற்கு!



**மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்: 17.09.2026**

**திருப்பணிகள், பாதுகாப்பு, நிர்வாகம் குறித்து எழும் கேள்விகள்!**

மிகவும் வேதனையான செய்திகள். ஆனாலும், உண்மைகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. கோவிலின் நலன் கருதி, எங்கள் அமைப்பு எழுப்பும் கேள்விகளையும் கோரிக்கைகளையும் முன்வைக்கிறோம்.

**கூட்ட அனுமதித் திட்டம்:** புதிய நிர்வாகத்தை மட்டும் குற்றம்சாட்ட முடியாது

2025ஆம் ஆண்டு அப்போதைய அமைச்சர் சேகர்பாபு வெளியிட்ட முக்கிய அறிவிப்பில், கும்பாபிஷேக விழாவின்போது கோவிலின் மேல்பகுதியில் சுமார் 8,000 பேரை அனுமதிப்பது குறித்துத் தெரிவிக்கப்பட்டது.

2026 கும்பாபிஷேகத்தில் 9,000 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது. இது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஏற்பாடு என்பதால், இந்த விவகாரத்தில் புதிய அரசையும் புதிய இணை ஆணையரையும் மட்டும் குற்றம்சாட்ட முடியாது.

**கும்பாபிஷேகத்திற்கு முன்பே முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள்:**

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து, அப்போதைய இணை ஆணையர் திரு. சுரேஷ், அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு 'ஆலயம் காப்போம்' அமைப்பு கடிதம் எழுதியிருந்தது.

கடித எண்: JC/MDU/KUMBABISHEKAM/001/2006

நாள்: 18.0.2026

குறிப்பு: கடித எண்ணும் தேதியும் மூல உரையில் உள்ளவாறே தரப்பட்டுள்ளன; அசல் கடிதத்துடன் சரிபார்க்கப்பட வேண்டும்.

**அந்தக் கடிதத்திலும் தொடர்ந்து எழுப்பப்பட்ட கோரிக்கைகளிலும் இடம்பெற்ற விவகாரங்கள்:**

1. பொற்றாமரைக் குள மூலிகை ஓவியங்கள்: 2010 முதல் நிறைவுபெறாமல் உள்ள ஓவியப் பணிகள்.
2. பழைய திருக்கல்யாண மண்டபம்: விதான ஓவியங்களைப் பாதுகாத்து மேம்படுத்த வேண்டிய அவசியம்.
3. செவந்தீஸ்வரர் சன்னதி: பொதுமக்கள் வழிபாட்டுக்கு அனுமதி வழங்குதல்.
4. சென்னீஸ்வரர் சன்னதி: மறைக்கப்பட்டுள்ளதாக நாங்கள் குறிப்பிடும் சன்னதி தொடர்பான நடவடிக்கை.
5. கோவில் பணியாளர்கள்: தேவைக்கேற்ப பணியாளர்கள் இல்லாத பற்றாக்குறை.
6. வைகை நதிநீர் அபிஷேகம்: நிறுத்தப்பட்டிருந்த இந்த வழிபாட்டை, கும்பாபிஷேகத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு மீண்டும் நடைமுறைப்படுத்திய புதிய இணை ஆணையர் திரு. செல்லதுரை அவர்களுக்குப் பாராட்டுகள்.
7. தலவிருட்சத் தோட்டம்: அழிந்து கொண்டிருக்கும் தோட்டத்தைப் பாதுகாத்தல்.
8. வைகை மைய மண்டபம்: அதன் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு.
9. இராயகோபுரம்: ஆக்கிரமிப்புகள் தொடர்பான நடவடிக்கை.
10. எழுகடல் வணிக வளாகம்: எழுகடல் நீர்நிலையின்மீது கட்டப்பட்டதாகவும், தீயணைப்புச் சான்றிதழ் இல்லாமல் தற்போது பிளாஸ்டிக் கிடங்கு செயல்படுவதாகவும் நாங்கள் எழுப்பியுள்ள புகார். இந்த விவகாரம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.
11. பிர்லா மந்திர்: கோவிலைச் சார்ந்த இந்தக் கட்டடத்திற்குத் தீயணைப்புச் சான்றிதழ் இல்லை என்ற எங்கள் புகார்.
12. பழைய அன்னக்குழி மண்டபப் பகுதி: பிர்லா மந்திர் அமைந்துள்ள, திருவிளையாடல் நடைபெற்றதாகக் குறிப்பிடப்படும் இடத்தில் விடுதி மற்றும் முதலுதவி மையம் செயல்படுவது தொடர்பான கேள்விகள். முதலுதவி மையம் குறித்து மூலக் குறிப்பில் இடம்பெற்றுள்ள "ரத்த சம்பந்தம் உள்ள" என்ற சொற்றொடரின் பொருள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.
13. புதிய எல்லீஸ் நகர் விடுதி: தீயணைப்புச் சான்றிதழ் தொடர்பான நடைமுறைகள் முழுமையடையவில்லை என்ற எங்கள் புகார்.
14. வீர வசந்தராயர் மண்டபம்: தீயணைப்புச் சான்றிதழ் இல்லை என்ற எங்கள் புகார்.
15. அறநிலையத்துறை மண்டல அலுவலகம்: தற்போது செயல்படும் அலுவலகத்தின் வாடகைப் பாக்கி தொடர்பான விவகாரம்.
16. கோவிலுக்குள் பெயிண்ட் கோலங்கள்: அவற்றின் பயன்பாடு தொடர்பான ஆட்சேபனை.
17. அன்னதானம்: உணவின் தரச்சான்று தொடர்பான சர்ச்சை.
18. சித்திர ரதக் கவிக் கல்: கோவிலில் இது இடிக்கப்பட்டதாக எழுப்பப்பட்டுள்ள புகார்.
19. உணவு தயாரிக்கும் இடம்: தீயணைப்புச் சான்றிதழ் பெறப்படவில்லை என்ற எங்கள் புகார்.
20. மின்சாரப் பணிகள்: பல லட்சம் ரூபாய் மதிப்பிலான ஐந்து மின்சார டெண்டர்கள் தொடர்பான விவரங்கள்.
21. கோவில் தங்கம்: கோவிலிலிருந்து தங்கம் மாற்றப்பட்டது தொடர்பான விளக்கம்.
22. தரிசன வரிசைகள்: இலவச வரிசையை நிறுத்தி, கட்டண வரிசைகளை இரண்டாக்கியதாக நாங்கள் எழுப்பியுள்ள புகார்.
23. கும்பாபிஷேகக் கணக்குகள்: திருப்பணிக் குழுக்கள் மற்றும் யாகசாலைச் செலவுகள் தொடர்பான தணிக்கை அறிக்கைகள்.

மேலும், அன்னக்குழி மண்டப இடிப்பு மற்றும் ஆகம விதிகளுக்குப் புறம்பாகக் கோவில் நடைகளைத் திறப்பது, அடைப்பது போன்ற விவகாரங்களிலும் 'ஆலயம் காப்போம்' அமைப்பு கடிதங்கள் வாயிலாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

**வெள்ளியம்பல நடராஜர் திருமேனி: விளக்கம் தேவைப்படும் கேள்விகள்:**

செப்டம்பர் 2026இல், கோவிலில் உள்ள ஸ்ரீ வெள்ளியம்பல நடராஜர் திருமேனியிலிருந்த பூச்சு தொடர்பாக 'ஆலயம் காப்போம்' அமைப்பு வழக்குத் தொடர்ந்தது. இந்த விவகாரத்தில் விசாரணை நடத்தக் கோரி உயர்மட்டப் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

**இதில் எங்களது கேள்விகள்:**

2005ஆம் ஆண்டு திருமேனியிலிருந்த பூச்சு ஏன் அகற்றப்பட்டது?

10.06.2005 அன்று தனியாகக் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது ஏன்?

அகற்றப்பட்ட பூச்சுப் பொருள் எங்கே கொட்டப்பட்டது?

2009ஆம் ஆண்டு முழுக் கோவிலுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றபோது, அந்தப் பூச்சு ஏன் மீண்டும் பூசப்படவில்லை?

'ஆலயம் காப்போம்' அமைப்பு நீதிமன்றத்தை நாடிய நிலையில், 14.07.2026 தேதியிட்ட அரசாணை எண் 75 மூலம் ரூ.13,96,000 ஒதுக்கப்பட்டு, சுமார் இரண்டு மாதங்களில், 17.09.2026 அன்று ஸ்ரீ வெள்ளியம்பல நடராஜருக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்றது என எங்கள் அறிக்கையில் குறிப்பிடுகிறோம்.

2005ஆம் ஆண்டு பூச்சு அகற்றப்பட்டு, ஜூன் 10 அன்று தனியாகக் கும்பாபிஷேகம் நடத்தப்பட்ட காலத்திலும், 2009ஆம் ஆண்டு முழுக் கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்ற காலத்திலும், மறைந்த திரு. கருமுத்து கண்ணன் தக்காராக இருந்தார். அவர் 2005 முதல் 2023 வரை அந்தப் பொறுப்பை வகித்தார்.

தற்போதைய அறங்காவலர் திருமதி ருக்மிணி பழனிவேல்ராஜன், 2006 முதல் 2011 வரை அறங்காவலர் குழு உறுப்பினராக இருந்தார். இந்த விவகாரம் அப்போதைய பொறுப்பாளர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதா? ஸ்ரீ மீனாட்சி அம்மனுக்கும் ஸ்ரீ சுந்தரேசுவரருக்குமே வெளிச்சம்!

**சிறுமலை 3,000 ஏக்கர் நில விவகாரம்:**

ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில் தொடர்பான சிறுமலைப் பகுதியில் உள்ள 3,000 ஏக்கர் நில விவகாரம் குறித்து உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கில், 'ஆலயம் காப்போம்' அமைப்பு பங்கேற்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

தமிழில் குடமுழுக்கு நடத்த வேண்டும் என்று போராடுபவர்கள், மீனாட்சி அம்மன் கோவிலின் இந்த விவகாரங்களிலும் கவனம் செலுத்திப் போராட வேண்டும் என்று தாழ்மையுடன் வேண்டுகோள் விடுக்கிறோம்.

கோவில் நிர்வாகம் யாரிடம் இருக்க வேண்டும்?

**ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவிலின் நிர்வாகத்தை யாரிடம் ஒப்படைப்பது?**

அரசியல்வாதிகளின் பிரதிநிதிகளிடமா? உண்மையான பக்தர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டு வருபவர்களிடமா? அல்லது இந்தக் கோவிலைப் பற்றி முழுமையாக அறிந்தவர்களிடமா?

இந்தக் கேள்விகளுக்கான உரிய முடிவுகள் வருங்காலத்தில் எடுக்கப்படும் என்று நம்புவோம்.

வெளித் தணிக்கையும் வெள்ளை அறிக்கையும் அவசியம்

அறநிலையத்துறை கண்டிப்பாக வேண்டும். ஆனால், அதன் பங்கு கோவில் நிர்வாகம் சார்ந்ததாக இருக்க வேண்டும். பட்டயக் கணக்காளர்களைக் கொண்டு வெளித் தணிக்கை நடத்தி, உடனுக்குடன் வெள்ளை அறிக்கைகள் வெளியிடப்பட வேண்டும். வரவு, செலவு மற்றும் திருப்பணிக் கணக்குகளில் வெளிப்படைத்தன்மை உறுதிசெய்யப்பட வேண்டும்.

**திருக்கல்யாணம், குடமுழுக்கிற்குத் தனித்தனிக் கணக்குகள்:**

கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் திருக்கல்யாணத்திற்கும், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் குடமுழுக்கிற்கும் தனித்தனிக் கணக்குகள் தொடங்கப்பட வேண்டும். அந்தக் கணக்குகளில் மாதந்தோறும் ஒரு தொகையை ஒதுக்கிச் சேர்க்க வேண்டும்.

இதன்மூலம் உபயதாரர்களைச் சார்ந்திருக்கும் தேவையைக் குறைத்து, சாதாரண பக்தர்களின் பங்களிப்புக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்கலாம்.

மக்கள்தொகைப் பெருக்கத்தையும் பக்தர்கள் வருகையையும் கருத்தில்கொண்டு, கோவிலுக்கு வெளியே அருகிலுள்ள பகுதிகளிலிருந்தும் குடமுழுக்கு வைபவத்தைக் காணும் வகையில் வசதிகளை முன்கூட்டியே திட்டமிட வேண்டும்.

நன்றி! வணக்கம்! வந்தே மாதரம்!

**இப்படிக்கு,**



எழுதியவர்:
**தினகரன் சுந்தரம்**
ஒருங்கிணைப்பாளர், ஆலயம் காப்போம், மதுரை மாவட்டம்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020